விராட் விஸ்வபிரம்மனே நமஹ





# அமரர்
# சுகந்தினி சிவானந்தராசா
## அவர்களின்
## 31 ஆம் நாள் நினைவுமலர்
## 2023.01.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்




தண்ணீரூற்று மேற்கைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சுகந்தினி சிவானந்தராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## " 31ம் நாள் நினைவுமலர் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
உடனிருந்து இன்று
வானுறையும் தெய்வமாகி விட்ட
அமரர் சுகந்தினி - சிவானந்தராசா
அவர்களின் பொன்னடிகளில்
இந்நூலினை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

விராட் விஸ்வபிரம்மனே நமஹ

இவ்வுலகில் 29 - 01 - 1971

இறையுலகில் 04 - 12 - 2022



தண்ணீரூற்று மேற்கைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சுகந்தினி சிவானந்தராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## சிரார்த்த வெண்பா

ஆண்டு சுபகிருது வருடம் கார்த்திகைத் திங்கள் நாளில்
பூண்டபுகழ் பூர்வபக்க திரயோதசி திதியதனில்
சுகந்தம் எனும் சுகந்தினி ஆசிரியப்பெருந்தகை
நிகர்த்த ஈசனடி சேர்ந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையை பேணுவோம்

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சத்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்கஎன்றார்.

## திருப்புகழ்

பத்தியால் யான் உனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனாமாறு எனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமாதான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி சுகந்தினி சிவானந்தராசா அவர்களின்

## வாழ்க்கை வரலாற்றுச் சுவடு

வன்னிப் பெருநிலப் பரப்பினிலே தன்னிகரற்ற சீரும் சிறப்பும் பொருந்திய தண்ணீரூற்று என்னும் கிராமத்தைச் சேர்ந்த அமரர் கனகாரசா, சிவநாயகி தம்பதியினருக்கு 1971.01.29ம் நாளன்று மூன்றாவதாக பிறந்தவளே அமரர் சுகந்தம் எனும் சுகந்தினியாவார்.

இவர்களை அன்பும் பாசமும் ஊட்டி வளர்த்து வரும் வேளை, அமரர் சுகந்தினி அவர்களை அவரது பெற்றோர் ஆரம்பப் படிப்பிற்காக, தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலையில் சேர்த்துக் கல்வியைக் கற்க ஆரம்பித்து வைத்தார்கள். தரம் 05 வரை அங்கு கல்வி பயின்ற அவர் தனது 6ம் வகுப்பைத் தேசிய பாடசாலையாம் மு/ வித்தியானந்தாக் கல்லூரியில் தொடர்ந்து, 1996ம் ஆண்டில் மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவானார்.

இதன் பயனாக இலங்கை ஆசிரியர் சேவையின் தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பெற்று ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் தனது முதல் நியமனப் பாடசாலையாக மு/ குமுளமுனை மகாவித்தியாலயத்தில் 1999.02.18 ஆந் திகதி ஆரம்பக்கல்வி ஆசிரியாரகக் கடமையேற்றார்.

அக்காலம் போர்ச்சூழல் பொருந்திய, போக்குவரத்துச் சேவையற்ற, குன்றும் குழியுமான, காட்டுப்பாதையில் துவிச்சக்கரவண்டியில் சென்று 5 வருடங்கள் சேவையாற்றினார். பின் தனது சொந்த இடமானதும் தான் கற்றதுமான மு/ தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று, 2004ம் ஆண்டில் அங்கு சேவையைத் தொடங்கினார். இவர் மாணவர்களை எவ்வளவு தூரம் ஆக்கத்துடனும், ஊக்கத்துடனும் கற்பித்தாரோ அதேபோன்று தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்வியையும் இக்காலப்பகுதிக்குள் தொடர்ந்து கற்று, ஆரம்பக்கல்விப் பட்டதாரி எனும் பட்டத்தைப் பெற்ற பெருமையும் இவரைச் சாரும்.

பின் வருடாந்த இடமாற்றத்தில் 2012ம் ஆண்டில் மு/ கலைமகள் வித்தியாலயத்திலும், 2019ம் ஆண்டிலிருந்து இறுதி மூச்சு நிற்கும் வரை மு/ வற்றாப்பளை மகாவித்தியாலயத்திலும் இவரது சேவை தொடர்ந்தது.

இவர் கல்விகற்றபித்த நான்கு பாடசாலைகளிலும் சிறந்த புலமைப் பரிசில் ஆசிரியர் என்ற பெருமைப் பெயரைப் பெற்றுப் பாராட்டப்பட்டவர். முல்லைத்தீவு மாவட்டமே போற்றும் அளவிற்கு இவரது சேவை தொடர்ந்தது.

மேலும் இவர் சிறந்ததொரு துரிதகணிதப் பயிற்சி ஆசிரியர். இரவு பகலாகத் தனது உடம்பையோ, உணவையோ கருதாது தனது இரத்தத்தை சாறாகப் பிழிந்து மாணவர்களுக்கு ஊட்டியவர்.

கல்வி சம்பந்தமான எந்த முயற்சிகளிலும் பின்நிற்கவில்லை. 2012ம் ஆண்டில் மு/கலைமகள் வித்தியாலயத்தில் கற்பித்த வேளை சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு "குரு பிரதீபா பிரபா" விருது பெற்றவர். ஏராளமான மாணவர்களைப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறச் செய்த பெருமையும் இவரைச் சாரும். மேலும் சிறுவர் நாடகம், துரிதகணிதம், தமிழ்த்தினம், வினாடிவினா, கட்டுரை, செயற்பட்டு மகிழ்வோம் போன்ற போட்டிகளில் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சியளித்து வெற்றிபெறச் செய்தவர்.

இவரது தந்தையாரான அமரர் கனகராசா என்பவரும் ஒரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரே. இவரின் பிள்ளைகளில் மூவர் ஆசிரியர் களாகவே உள்ளனர். (அமரர் சுகந்தினி உட்பட) தந்தையாரைப் போல இவரும் மிகச் சிறப்பாகவே தனது சேவையைப் புரிந்தவர். முதல் நியமனத்தின் போதே குமுளமுனை மகாவித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேற்றில் தனது சாதனையைக் காண்பித்து வெற்றியை நிலை நாட்டியவர் இதையிட்டு அமரரான தந்தையார் அகமகிழ்ந்தது இன்றும் பசுமையாகவே நிறைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ம் ஆண்டு தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றபோதும், கூட புலமைப் பரிசில் வகுப்பே இவரிடம் கையளிக்கப்பட்டது. அப்போதைய பெற்றோரின் ஒத்துழைப்புடன் தொடர்ந்து இவரது திறமைகள், சாதனைகள், வெளிக்காட்டப்பட்டன. இவ்வேளை 2005ம் ஆண்டில் தந்தையார் நோய் காரணமாக இறப்பைத் தழுவ, குடும்பத்தையே பொறுப்பெடுத்தார் மூத்த மருமகன் கௌரிராசா அன்றிலிருந்து தந்தைக்கு தந்தையாக இருந்து 2016ம் ஆண்டில் கிளிநொச்சி வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த அமரர்களான ஐயாத்துரை பொன்னாச்சி ஆகியோரின் இளைய மகனான சிவானந்தராசாவை கரம்பிடித்து, ஒற்றுமையாகவும், இனிமையாகவும், அவர்களது வாழ்வு முன்னகர்ந்தது. கணவர் சிவானந்தராசா, அமரர் சுகந்தினிக்கு உற்ற துணைவராகவும் அன்பான கணவராகவும் விளங்கினார்.

இவ்வாறு வாழ்ந்த, அமரர் சுகந்தினிக்கு கடந்த ஆறு மாதங்களாகப் பீடிதத நோயினால், சில நாட்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண்டி இருந்தது. அக்காலத்தில் வைத்தியசாலைக் கட்டிலில் இருந்த போதும் கூட புலமைப் பரிசில் பிள்ளைகளுக்கு நான் வகுப்பு எடுக்க வேண்டும் என்று அங்கிருந்தவர்களிடம் பகிர்ந்துள்ளார். அத்துடன் தனது மாணவச் செல்வங்களுக்குத் தொலைபேசி மூலம் வினாத்தாள் அனுப்புவதிலும், வினாப்பத்திரம் திருத்துவதிலும், முனைப்பாக இருந்தார்.

இறுதிவரை தனது உள்ளக் கிடக்கைகள் யாவும் புலமைப்பரிசில் பரீட்சை எண்ணத்துடனேயே இருந்தார். இவ்வாறு தனது எண்ணங்கள,சிந்தனைகள் அனைத்தையுமே மாணவர்களின் கல்விக்காக அர்ப்பணித்ததொரு மாபெரும் தியாகி, இது காலனுக்குப் பொறுக்கவில்லை போலும் "உன்பணி இவ்வுலகில் நிறைவடைந்தது. வா" என்ற இறைவனின் அழைப்பை ஏற்று 04.12.2022 அன்று பூர்வபக்கத்துடன் கூடிய திரயோதசி திதியன்று முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலையில் காலை 9.45 மணியளவில் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார்.

அவரது ஆத்மா சாந்தி அடைவதாக

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவரின் புலம்பல்.....!

காத்திருந்து கைப்பிடித்தோம்
காலமெல்லாம் வாழலாம்
என்ற கனவோடு நானிருக்க
கைவிட்டுச் சென்றீரே
கரையேற முடியாமல்
காட்டாற்று வெள்ளத்தில்
தனியாகத் தத்தளிக்கின்றேன்
காப்பாற்ற யாருண்டு

மீட்டெழுந்து வாருங்கள்
வாருங்கள் என்று- மாணவர்களும்
உறவுகளும் கதறி அழுத குரல்
கேட்காமல் போனதேன்
கல்லாய் இருந்தவளிடம்
கருணை எதிர்பார்த்தது தவறுதான்

நாம் வாழ்ந்த காலங்கள்
குறைவு என்றாலும்
வாடாமல் வாழ்ந்தோம்
என்பது நிறைவு தான்

அப்பாச்சி அப்பாச்சி என
இனியார் அழைப்பார்
நீங்காத நினைவுகள்
உறங்காது மலரட்டும்
ஆனந்தக் கண்ணீர் கூட- இனிக்காதே
நான் என்ன செய்வேன்
எதிர்பார்த்து வந்தாலென்ன?
எதிர்பார்க்காமல் வந்தாலென்ன?
இடி இடி தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயாரின் அவலம்......!

பத்து மாதம் சுமந்து, பக்குவமாய்ப் பெற்றெடுத்து,
இத்தரையில் நீவாழ, இனிதெனவே உயர்ந்திடவும்
எத்தனையோ தெய்வங்களைக் கையெடுத்து
வணங்கிநின்றேன்

அத்தனையும் பொய்த்ததுவோ!
என் ஆலமரம் சரிந்ததுவோ!
பித்தெனவே நான்மாற இறைவன் விட்டனனோ!
நானிருக்க நீபோக காலனவன் அழைத்தானோ!

அம்மா என் சுகந்தி, உன் ஆளரவம் கேட்கையிலே
உன் அம்மாவின் மனமோ ஆரவாரம் கொள்ளுதடி
என் தளர்ந்த வயதின் ஊன்றுகோல் போனதுவோ
நாளாந்தம் நான் புலம்ப ஆண்டவனும் விட்டானோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர சகோதரிகளின் புலம்பல்.....!

எம் உடன் பிறந்த உயிருக்குயிரான
அன்புச் சகோதரியே !
இவ்வளவு அவசரமாய் எமை
விட்டுப்பிரிந்ததேனோ? உன்னை
இழந்து தவிக்கின்றோம். கண்களில்
இருந்து வழிந்த கண்ணீரின்
ஈரம் இன்னும் காயவில்லை.
உனை இனி எங்கு காண்போம்
உன் அன்பான சிரிப்பும், இரக்கமான
குணமும் மறக்கமுடியாதவை
உனது இழப்பை ஏற்க எம்மனம்
மறுக்கின்றதம்மா போய் வா
செல்லமே விண்ணில் வந்து
காண்போம்.

சகோதர,சகோதரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சான், மச்சாள்மார் புலம்பல்...!

மச்சாள் என்றுன்னை அழைக்க
மலர்ந்து நீ சிரிப்பாய்
இச்சாவு வந்துன்னை
ஏன் அழைத்துச் சென்றதுவோ
கணவனவன் கைத்தலத்தில்
கண்மணிபோல் நீயிருந்தாய்
கனவெல்லாம் மாணவர்கள்
நலன்களையே நாடிநின்றாய்
ஊரெல்லாம் உனைமெச்ச உறவெல்லாம்
கிடந்து கதற
எமை நீங்கிப் போனாயோ!
ஏக்கத்தில் துடிக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் புலம்பல்.....!

ஐயகோ! ஆற்றாத் துயரோடு
அழுது புலம்புகின்றோம்
தேற்றவும் நீயின்றித்
தேடி அலைகின்றோம்
பெரியம்மா என்றுன்னை
ஓடிவந்து நாமணைக்க- இனி
யாரிங்கு இருப்பாரோ
ஆசையோடு எமையணைக்க

தீராத துயரம் சித்தி
தீர்க்க வழியில்லையிங்கு
பாசத்தோடு எமைப்பார்க்கும்
ஆசைமுகம் இனி எங்கே?
நீறாகிப் போனதுவோ
எங்களின் ஆசையெல்லாம்
நாளாந்தம் உமையெண்ணி
நாம் வடிப்போம் இனிக்கண்ணீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்.....!

அன்புள்ள அத்தை உன் ஆசைமுகம் எங்கே?
பண்புள்ள உறவொன்றின் பாசவார்த்தை
இனிஎங்கே?
இனியுள்ள காலமெல்லாம் உனை நினைத்து
புலம்புகின்றோம்
கனியிருக்க காய்தன்னைக் காலனவன்
கவர்ந்ததென்ன
வாடித்துயரோடு உன் வாசல் வந்தால்

ஓடித் துயர் துடைத்து ஓராயிரம்
ஆறுதல் தந்தாய்
வாடித் துடிக்கின்றோம் வந்தெம்மைப்
பாராயோ
ஆடி அடங்குதலே வாழ்வாகிப் போனதுவோ.!

மருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

பார் போற்றும் மாதர்தனில்
மகத்துவமே! மரகதமே!
கார் மேகமென பொழிந்தீரே அன்பையும், பண்பையும்
சுட்டுவிடாத பேச்சும்
வெட்டிவிடாத நட்பதுவும்
பலரை கட்டிப்போடும் அன்பு மொழியும்
பொய்யாகிப் போனதுவே

பண்புகள் பல கொண்டு
இல்லத்தரசியாய் அரியணை அமர்ந்தீர்.
இல்லாளாக சுடர்பரப்பி இல்லறம் எனும் நல்லறம் புரிந்தீர்
பண்பின் இலக்கணமாய்த் தொண்டுகள்
பல செய்தீர்.

கல்லாதவர் கரம்பிடித்து நல் ஆசானாய்
கல்வி எனும் நற்பணி புரிந்தீர்!
தரம் ஐந்து தளிர்களுக்குத் தாயாகத் திகழ்ந்தீர்!
அதற்காய் சந்தணமாய் கரைந்தீர்!
கற்பூரமாய் மிளிர்ந்தீரே அணைந்தீரே!

நீர் எம்முடன் உள்ளீர் எனும் நினைப்பில்
எமக்கு நித்திரையில் கனவு வந்தது
இன்று எமை விட்டு நெடுந்தொலைவு சென்றதனால்
நிலவு கூட துயில மறுக்கின்றது.
எமக்கு கனவு கூட தொலைந்து போனது

எம் கன்னத்து முற்றத்தில் கண்ணீர் துளிகள்
இன்னும் காயவில்லை
விழிகளில் அதற்கு பஞ்சமில்லை
இதய அறைகள் எரிதணலால்
நிரம்பி வழிகின்றன
இன்னும் ஒரு முறையேனும் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடன் உலா வருவீரா? என மனம்
ஏங்கித் தவிக்கின்றது இதயம் கனக்கின்றது
கூற்றுவனுக்கு சாபமிட்டபடியே நாட்காட்டி
தன் நாட்களை நகர்த்துகிறது.

எனினும் காலம் பிரசவித்த
காந்தள் மலருக்கு மரணமேது
ஞாலம் உள்ளவரை
உம் நினைவை சுமந்த இதயங்களுக்கு
எவரும் திரையிட முடியாது
எம் அன்பிற்கு அணையிட முடியாது
நிம்மதியாய் உறங்கும்
இதைவிட எம்மால் யாது செய்ய முடியும்
உம் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

இ.இந்திரகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாவின் சகோதர சகோதரிகளின் உள்ளக் குமுறல்

வற்றாப்பளை அம்மனின் ஆலயத்தில் பெண்பார்த்து உம்மை வாழ்க்கைத் துணையாய்த் தேர்ந்தெடுத்த சகோதரனை வாழ்வின் இடையில் விட்டுச் செல்ல என்ன அவசரம் சுகந்தி ஏற்பட்டது. வாழ்வின் இறுதிவரை இணைத்திருப்பீர் என்றிருந்த எம் தம்பியை, ஏங்கிக் கலங்கவைத்துவிட்டு எவரும் அறியமால் எங்கு சென்றீர் சுகந்தி. எங்குவந்தாலும் தரித்து நிற்காது உம்மிடம் ஓடிவரும் எம் தம்பியை இப்போது மட்டும் விட்டுச் செல்ல எப்படி முடிந்தது உம்மால்? தான் தனியே கைவிடப்பட்டு விட்டேன், என்று தவிக்கும் தம்பியை எப்படித் தேற்றுவது சுகந்தி? அண்மையில் தாயின் இறுதிக்கடமையை முடித்த அவருக்கு உமது கடமையையும் செய்யும் துர்ப்பாக்கியத்தையும் வழங்கிவிட்டு எங்கே சென்றீர்?

நோய்வாய்ப்பட்டீர் என்ற செய்தியை அண்மையில் தான் அறிந்தோம். அதற்குள் சிகிச்சை பலனளிக்காது இவ்வுலகையே விட்டுச் சென்றுவிட்டீர், என்பதை எண்ணியும் பார்க்க முடியவில்லையே. மேற்கே வண்ணேரியில் இருந்து கிழக்கே தண்ணீரூற்று வந்து உம்மை கைப்பிடித்த எம் சகோதரனை என்ன காரணத்தால் எதுவும் கூறாது பிரிந்து சென்றீர்? தவிக்கும் தம்பியைத் தேற்றும் வழிதான் யாமறியோமே. உமது சிகிச்சையைவிடவும் பிள்ளைகளின் தரம் ஐந்துப் புலமை பரீட்சைக்கு வழிகாட்டுவதே முக்கியம் எனக்கருதி சிகிச்சையைத் தாமதப்படுத்தி இப்போ எல்லோரையும் இடையில் விட்டுச் செல்ல எப்படி மனம் வந்ததோ? தம்பிக்கு இனி என்ன வழி காட்டுவது.

அவரது மீதிக்காலம் எப்படி அமையப்போகின்றதோ என நாம் குழம்பிக் கலங்கிநிற்கின்றோம். எத்தனை நாளைக்குத்தான் அவரது தனிமையைப் போக்க உறவுகள் நாம் அவருடன் வந்து நின்று தனிமையைப்போக்குவது அப்படிச் செய்வதால் நீர் இல்லாது சென்ற இடைவெளியை நிரப்பத்தான் முடியுமா? உமது இழப்பைக் கேள்விடப்பட்ட எல்லோரும் தமது கவலையை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் உமது இழப்பை ஈடுசெய்ய எவருக்குமே வழிதெரியாது தவிக்கின்றனர். முன்மாதிரியான ஆசிரியராம் நீர் புகழ்கின்றனர்.கல்விச் சமூகத்தினர் பெற்றோர், மாணவர்கள், என அனைவரும். ஆனால் முன் மாதிரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தலைவி என்ற தகைமையைத் தக்கவைக்க இயலாது போய்விட்டதே உம்மால்.

விதி செய்த சதியா? காலன்வழங்கிய கொடுந்தீர்ப்பா? நம்நாட்டு வைத்தியத்துறையின் பலவீனமா? நீர் காட்டிய அலட்சியமா? எதுவென நாம் கூற? ஏதும் அறியாது குழம்புகின்றோம். எப்படி எம் தம்பிக்கு ஆறுதல் கூற? யாரால் இதற்குத் தீர்வு கூற முடியும்? யாரிடம் நாம் செல்ல? விடைகாணமுடியாது குழம்பிநிற்கின்றோம்.

எம் அன்புத்தம்பியே உன் வாழ்க்கை இப்படி அமைந்து விட்டதே உனக்கு நாம் எப்படி ஆறுதல் கூறமுடியும்? என்னவழியைக் காட்டமுடியும்? உன் சகோதரங்கள் என்று நாம் இருந்தும் உனது இன்றைய நிலையில் இருந்து மீண்டுவர வழிகாட்ட முடியாது தவிக்கின்றோமடா "வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் வேதனை இருக்கும்" என்ற பாடல் வரிகள் மனிதவாழ்வின் அவலத்தையும் துன்பத்தையும் வெளிப்படுத்தி நின்றாலும் எம்மால் இதைவைத்து ஆறுதல் அடைந்துவிட முடியாதுள்ளது சோதரனே.

அன்புச் சகோதர,சகோதரிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியின் பெருவிருட்சம்

சுகந்தி ரீச்சர்..... எமது பிரதேசத்தின் ஆரம்பக்கல்வியைத் தாங்கி நின்ற பெருவிருட்சம் "ஸ்கொலசிப்" சுகந்தி என்ற அடைமொழியாலேயே சுகந்தி அழைக்கப்படுவது வழக்கமாக இருந்தது. கரைதுறைப்பற்றுக் கோட்டத்தின் சகல பாடசாலைகளும் சுகந்தியை தமது பாடசாலைக்கு எடுப்பதில் போட்டிபோட்டுக் கொண்டிருந்த காலம் என் கண்முன்னே விரிகிறது.

சுகந்தி ரீச்சர் நான் கலைமகள் வித்தியாலயத்தில் கடமையாற்றிய காலத்தில் அங்கு இடமாற்றம் பெற்று வந்தார். பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமகிழ்ச்சி. மிகச் சிறப்பாகத் தனது கடமையைச் செய்து முதல் தடவையாக அந்தப்பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் எண்ணிக்கை பதினைந்தைத் தாண்டச் செய்தவர்.

குமுளமுனை மகாவித்தியாலயம், தண்ணீரூற்று இ.த.க பாடசாலை, கலைமகள் வித்தியாலயம் ஆகியவற்றில் நிறைவான சேவையாற்றி வற்றாப்பளை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கும் அல்லும் பகலும் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் தனது உழைப்பின் அறுவடையைக் காணமுன்னரே அவரை இறைவன் அணைத்துக்கொண்டுவிட்டார்.

தண்ணீரூற்றில் எமது அயலவரான சுகந்தி எமது குடும்பத்துடன் நெருக்கமான நட்புக் கொண்டவர். தண்ணீரூற்று அவரை "சுந்து" என அயலவர்கள் அழைப்பது வழக்கம் ஒரு நல்ல ஆசிரியையாக மட்டுமன்றி நல்ல அயலவராகவும் வாழ்ந்தவர். விதி அவரது வாழ்வை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டது.

இன்னும் குறைந்தது இரண்டு தசாப்தங்களாவது கல்விக்காக உழைத்திருக்கக் கூடியவர். தனது உடல் நலனை நோக்காது மாணவரின் நலனை மட்டுமே நோக்கியதாலோ என்னவோ இடையில் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவரது வெற்றிடம் நிரப்பப்படமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

சுகந்தியும் நிச்சயமாகத் தெய்வத்துள் வைக்கப்படுவார். என்பதில் சந்தேகமில்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

திரு.க ஜெயவீரசிங்கம்
அதிபர்
மு/குமுளமுனை ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகந்தினி என்கின்ற அட்சய பாத்திரம்

மானிடர்களாகிய நாம் வாழ்க்கையில் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை அவ்வாறே நினைக்காதவை நடந்துவிடுவதும் உண்டு. அவ்வாறுதான் அமரர் சிவானந்தராசா- சுகந்தினி அவர்களின் மரணமும் யாரும் நினைக்காத ஒரு நேரத்தில் நடந்ததுவிட்டது. ஆம் மரணம் என்பது எல்லோருக்கும் திண்ணம் எனினும் இது இவருக்கு இப்போது வருவது தருணம் அல்ல இவருடன் சேர்ந்து பணியாற்றிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்காமை துரதிஷ்டம் என்றே நான் எண்ணுகின்றேன். எனினும் தனிப்பட்ட முறையில் சுகந்தினி ஆசிரியரை எனக்கு நன்கு தெரியும். எனது துணைவியாருடன் நெருக்கமாகப் பழகியவர்.

மு/தண்ணீரூற்று இ.த.க பாடசாலையில் 2005-2012 வரை இவர்கடமையாற்றிய காலம் பாடசாலைக்கு ஒரு பொற்காலம் என்றே கூறவேண்டும். இவரது காலத்தில் தான் இப் பாடசாலையில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோரின் தொகை ஓரிலக்கத்தில் இருந்து ஈரிலக்கத்திற்கு மாறியது. அதாவது ஒன்பதிற்குள் இருந்து பத்திற்குக் கூடுதலாக அதிகரித்தமைக்கு இவரே காரணம். மேலும் தனியாகப் பரீட்சையுடன் நின்று விடாது இணைபாடவிதானங்களிலும் கரிசனை காட்டி மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து பல்வேறு போட்டிகளில் மாகாணநிலை வரை இடங்களைத் தக்கவைத்த பெருமை இவரையே சாரும். மேலும் இவர் தனது சேவையை தனியே ஒரு பாடசாலைக்கோ ஒரு சமூகத்திற்கோ என குறுகிய வட்டத்தில் வழங்காமல் மு/குமுளமுனை ம.வி. மு/ கலைமகள் வித்தியாலயம், வற்றாப்பளை ம.வி. என தனது குறிப்பிட்ட சேவைக்காலத்திற்குள்ளேயே பல்வேறு பாடசாலைகளுக்கும் வழங்கி ஒரு மாணவர் பரம்பரையையே உருவாக்கிய சாதனை நாயகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மரணம் என்பது எதிரிக்கும் வரக்கூடாது என்பதன் மூலம் அதன் வலியையும், வேதனையையும், பிரிவுத்துயரையும் வார்த்தைகளால் வடிக்க முடியாது, என்பது 'யாவரும் அறிந்த விடயமே. மேலும் ஏற்கனவே திட்டமிட்டபடி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நவம்பர் மாதம் நடைபெற்றிருந்தால் இவர் தனது நோய்க்கான சிகிச்சையை ஒரு மாதத்திற்கு முன்பே பெற்றிருப்பார். ஓய்வும் கிடைத்திருக்கும். நாங்கள் அரிய பொக்கிசத்தை, அட்சய பாத்திரத்தை இழந்திருக்கமாட்டோம், என நினைத்து என் மனத்தையும் தேற்றிக் கொள்கின்றேன். இப் பெருந்துயரில் இருந்து அமரர் சிவானந்தராசா சுகந்தினி அவர்களின் கணவர், குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள, நண்பர்கள், அவரது மாணவச்செல்வங்கள் என அனைவரும் படிப்படியாக மீண்டுவர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன். அவரின் ஆசிகள் என்றைக்கும் எமது பாடசாலைக்கு கிடைக்கும் என்பது உறுதி.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

திரு. S. சத்தியசீலன்
அதிபர்
மு/தண்ணீரூற்று இ.த.க பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் சுகந்தினி சிவானந்தராசா அவர்கள் கடந்த 04.12.2022 அன்று காலமானார் என்ற செய்தி மாணவர் உலகத்திற்கு வீழ்ந்த பேரிடியாகும்.

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்ற ஆன்றோர் வாக்கிற்கு ஏற்ப மாணவர்கள் மத்தியில் சிறந்த ஒரு ஆசிரியராக வலம் வந்தவர் குறிப்பாக தரம் 05 புலமை பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்வதில் அவருக்கு நிகர் அவராகவே இருந்தார். இவ்விடயத்தில் அவர் தனது இலக்கை என்றுமே தவறவிட்டது கிடையாது.

பிள்ளைகளை அன்போடும், பரிவோடும் அரவணைத்து பாடம் புகட்டுவதில் கைதேர்ந்தவர். பெற்றோர்களின் நன்மதிப்பைப் பெற்று கடமையாற்றிய ஒரு சிறந்த ஆசிரியரை நாம் இழந்து விட்டோம். பாடசாலைகளில் மட்டுமல்ல பிள்ளைகளை தன் வீட்டுக்கே அழைத்து பாடம் புகட்டும் ஒரு ஆசிரியர் தனது நோயையும் பாராது மாணவர்களுக்காக உழைத்த அந்த நல்ல உள்ளம் இன்று எம்மிடையே இல்லை.

**"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று."**

என்றவள்ளுவர் வாக்கிற்கு அமைவாக வாழ்ந்து வானுலகம் சென்ற ஆசிரியர் சுகந்தினி அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!!*

திரு.ம.கமலகாந்தன்
அதிபர்
மு/கலைமகள் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் அழியாத காவியம்

எமது பாடசாலையில் திருமதி.சுகந்தினி சிவானந்தராசா கடமைப் பொறுப்பேற்ற நாள் முதல் இறக்கும் இறுதிக்காலம் வரை உமது மாணவர்களையும், பாடசாலையையும் நேசித்தது மறுக்க முடியாத உண்மை உமது கணவரும் அவ்வாறே நடக்க அவரை மாமா என்றழைக்கும் உரிமை கொடுத்த பண்பின் சிகரமே.

கடமை கண்ணியம் கட்டுப்பாடு இவை உமது வாழ்வின் இலட்சியங்களாகக் கொண்ட போதும் உமது வாழ்வை நோயை மறந்து சேவை செய்தீர். உமது உயிரினைக்காக்க மறந்தீரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் புலமை பரிசில் மாணவரை மட்டுமே எண்ணி இருந்தீர்கள் வினாத்தாள் தொலைபேசியில் போட எண்ணியபடியே உயிர் துறந்தீர் உங்கள் இலட்சியத்தை எமது மாணவர்கள் நிறைவேற்றும் நாள் நிறைவேற்றுவார்கள்.

என்னைப்பற்றி எங்கட அதிபருக்குத் தெரியும் என உங்கள் மூத்த அண்ணியிடம் கூறியது மறுக்க முடியாது ஓய்வைப்பற்றி கதைத்த போது பரீட்சை முடிந்ததும் அது பற்றி யோசிப்பேன் என மறுத்துக்கூறி உடல் நலம் பாராமல் உயிரைத் தியாகம் செய்த உத்தமியே உம்மை இழந்து தவிக்கும் எமது பாடசாலைச் சமூகம் உம்மிடம் கற்ற மாணவ மாணவிகள் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் துயரை பகிர்வதோடு உமது ஆத்மா இறையடி சேர்ந்து அமைதி பெற எல்லாம் வல்ல இறைவன் அருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

**நன்றி**

**கலாநிதி.க திருக்குமரன்**
**(அகில இலங்கை சமாதான நீதிவான்)**
**அதிபர்**
**மு/வற்றாப்பளை ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

சில காலம் பழகி விட்டு
பல நினைவுவைத் தந்து விட்டு
பறந்துதான் போனாயே!
பதை பதைக்குதம்மா எம் இதயம்
உன் வகுப்பறைக்குள்
செல்லும் போதெல்லாம்
பசுமையான உன் முகம் தெரியுதே
நீ நின்னைவாகிப் போனதை!
நம்ப எம் இதயம் மறுக்குதே!
எங்களுடன் உறவாக ஒன்றாக
பழகிய நாட்கள் நினை வாகிச் சுடுகிறதே!
எப்போதும் மறக்காதே உன் நினைவும்
எங்கள் வீடுகளில் நீ நடந்த இடங்கள்
நெருப்பாகிச் சுடுகிறதே நினைவாக
உன் நினைவுடன் ஈர விழிகளுடன்

என்றும் உன் அன்பு உடன் பிறவா
சகோதரிகள்
விஜயகலா, புஸ்ப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

இதற்கேற்ப வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் தெய்வமாகி என்றும் எம்முடன் தான் ஆற்றிய நற் செயலால் மக்கள் மனதில் வாழும் அமரர் திருமதி சிவானந்தராசா- சுகந்தினி அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வீரமும் தன்மானமும் மிகுந்த வளம் மிக்க வன்னி நிலப்பரப்பில் ஐவகை நில வளமும் கொண்ட உலகெங்கும் தமிழர் கதை கூறும் முல்லை மண்ணில் கல்வியும், கலையும் கலந்து விளையாடும் தண்ணீரூற்றுப் பதியிலே பிறந்து வளர்ந்து கல்வி கற்று திருமணவயதாகியதும் கிளிநொச்சியிலே வாழ்க்கைத்துணையாக அமைத்து மீண்டும் தனது சொந்த இடத்திற்கே பணிபுரிய வேண்டுமென வந்தமர்ந்தார்.

அன்னார் தனது உடல் நிலையையும் பொருட்படுத்தாது பிள்ளைகளின் கல்விக்காக தன் உடலை வருத்திப் பாடுபட்டவர் என் பிள்ளைகள் உட்பட அனைத்து பிள்ளைகளுக்கும் அறிவூட்டி கல்வி புகட்டி நல் மாணவராய் திகழ வழிகாட்டியவரும் ஆவார். அன்னாரின் இறப்புச் செய்தி மிகவும் மனவருத்தத்திற்குரியது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர் நாமம் என்றும் வாழ்க!

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**இ. பத்மகுமாரக் குருக்கள்**
**சோ.ஜனார்த்தனக் குருக்கள்**
**ஊற்றங்கரை சித்தி விநாயகர்**
**தேவஸ்தானம் ஊற்றங்கரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய அத்தான் - கௌரியண்ணையின் இரங்கல்

சுந்து சுந்து என்று அழைத்தபோதெல்லாம் இனிமையாகக்
கதைத்து எங்கள் எல்லோரையும் சிரிக்கவைத்தாயே!
கல்வியில் அரும்பாடு பட்டாயே
கல்வி சிறக்க வேண்டுமென்று உனை அர்ப்பணித்தாயே!
மாணவச் செல்வங்களை உனது சொத்தாக
மதித்தாயே!
கல்விக்கு அதிபதியாம் கலைமகள்
உன்னை அரவணைத்துக் கொண்டாளோ
தோற்றம், மாற்றம், மறைவு என்ற சுழற்சியிலே
காலம் நகர்கின்றது.
ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கும் இந்த காலநதியில்
காலத்துக்குக் காலம் தோன்றி மறையும் நீர்குமிழிகள்
போன்று நிலையற்றதாக மனித வாழ்வு சாவுடன்
முடிந்து போகின்றது. முற்றுப் பெறுகின்றது.
ஆனால் உனது வாழ்வும் வரலாறும் அப்படியானதல்ல
மரணத்தின் பின்னாலும் உன்னுடையவாழ்வு
எம்முடன் தொடர்கின்றது.
கல்வி அண்ணையின் அரவணைப்பில் நித்திய
வாழ்வாங்கு வாழ்கின்றாய்
சத்தியத்தின் சாட்சியாக நின்று மனவலிமையுனடன்
கல்விப் பாதையை வழிகாட்டி நெறிப்படுத்தி
உன்னுடைய கனவுகள் இளைய
சமுதாயத்தினர் நிறைவேற்றுவார்கள்.

அத்தான்,அக்கா
(கௌரி குடும்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசானுக்கோர் இரங்கல்

தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சுகந்தினி ஆசிரியை ஆசிரியர் குடும்பத்தில் பிறந்த ஓர் அகல்விளக்கு. இவரது தகப்பனார் அமரர் கனகராசா என்பவரும் ஒரு ஆசிரியரே. சுகந்தி அர்ப்பணிப்பான சேவைக்கு இலக்கணமாகத்திகழ்ந்த சிறந்த ஒரு ஆசிரியை.

இவர் கடமையாற்றிய பாடசாலைகளில் மாணவர்களது மனதில் பதியும் வித்தைகளுடன் கூடிய கற்பித்தலால் என்றும் நிலைத்து நிற்பவர். சேவையின் முக்கியத்துவம் உணர்ந்து உனது நோயையும் பொருட்படுத்தாது உன்னிடம் ஒப்படைத்த மாணவர்களை புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராக்கிக் கொண்டிருக்கும் வேளையில் உனது ஆத்மா இறைவனடி சேர்ந்தமை உன் கடமை உணர்வின் மகத்துவத்தை வெளிப்படுத்துவதாயுள்ளது.

எனது சேவைக்காலத்தில் நீ கற்பித்த பாடசாலைகளில் கூடிய வெட்டுப் புள்ளிகளுடன் மாணவர்களைச் சித்தியடையச் செய்தாய் என்று வரலாற்றுப் பதிவுகளாகப் பார்க்கப்படும். இறுதி யாத்திரையின் போது உன்னிடம் கற்ற மாணவர்கள் மலர்தூவி அஞ்சலி செய்தமை, பெற்றோர்கள் ஆசிரியர்கள் அழுது புலம்பியமை அனைத்தும் உன்சேவையை எடுத்துக் காட்டுவதாய் அமைந்தது.

சேவையாற்ற வேண்டிய வயதில் திடீரென இறைவன் உன்னைத் தன்பாதங்களில் சேர்த்துக் குடும்பத்தாரை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டான்.

"பிறப்பு நிகழ்ந்தால் இறப்பு ஒன்று நிச்சயம்
என்பது நியதி"

என்று குடும்பத்தவரை ஆற்றுப்படுத்துவதுடன் உன் ஆத்மா சாந்திக்காய் கல்விச் சமூகம் சார்ந்து பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

திருமதி. உ.முனீஸ்வரன்
(ஓய்வு நிலைய வலயக் கல்விப் பணிப்பாளர்)
முல்லைக் கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் காணிக்கை

தண்ணீற்றில் வந்துதித்த தரணி போற்றும் தாரகையே ஏனம்மா உமக்கிந்த அவசரம்..........
புலமைப் பரீட்சைக்கு புகழ் பூத்த ஆசானே!
புரியவில்லை எமக்கு நீர் போன விதம்.......
புலமைக்கு ஆயிரம் பேர் உண்டு பூமியிலே.....
எமக்கும் எம் சந்ததிக்கும் உமைவிட்டால் வேறு யாருண்டு தாயே........
"தரம் ஐந்து புலமைப் பரீட்சை" என்றால் சுகந்தி ரீச்சர் இருக்க எமக்கென்ன பயம்? இவ்வாறு பலர் பேசக் கேட்டுள்ளேன் பலதடவை
உமது இறுதி வகுப்பில் எனது மகள் இருந்தாள்......
அவள் கொடுத்து வைத்தவள்......
பணி புரியும் இடத்தில் ஓய்வாக இருந்ததை நாம் காணவில்லை ஒருபோதும்.......
அதானால்த் தான் இறைவன் உமக்கு நிரந்தர ஓய்வைக் கொடுத்தானோ!
நேரம் தவறாமை வீண்விரயம்
இரண்டையும் உம்மிடம் நாம் காணவில்லை....
பாடசாலை தொடங்கிவிட்டால் வகுப்பறையைத் தவிர வேறு எங்கும் உமைக் காண முடியாது. உடல் நிலை பற்றி உமைக்கேட்டால் உடனே உமது முகம் கறுத்துவிடும்.......
மேலதிக சிகிச்சைக்கு போங்கோ ரீச்சர் என்று நாம் கேட்டால்..
கொலசிப் முடியட்டும் என்று கூறி புன்முறுவல் செய்வீரே.....
பாடசாலை செல்ல முடியவில்லை எமக்கு....
வற்றாப்பளை ம.வியும் உமது பிள்ளைகளும் உம்மைத் தேடுதம்மா..... விழிநீர் சொரிந்து.

திருமதி. சித்திரா அமலதாஸ்
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் கற்பகதரு

அடங்காப்பற்று வன்னிமண்ணிலே தண்ணீரூற்றுப் பதியிலே கண்ணியமான குடும்பத்திலே பிறந்து வளர்ந்துள்ள சுகந்தினி. வாழையடி வாழையாகக் கல்விக்கு உரம் கொடுத்த கலங்கரை விளக்கு. இன்று எம்மோடு இல்லை. உலகில் பிறந்தவர் எல்லோருக்கும் இறப்புண்டு என்பது பொது நியதியானாலும் இறந்த பின்பும் வாழ்பவர் ஒரு சிலரே. அவர்களில் எம் சுகந்தியும் ஒருவர். கல்வியிலே கற்பகதரு போல் கலங்காத உம் கொடையும், கல்வியின் சிறப்பறிந்து கற்பித்த உம் ஊக்கமும் கண்டு பல நாட்கள் நான் வியப்படைந்தேன். உண்மையாக உழைத்ததால் உம் பிணிகூட மறந்து இறுதிநேர நினைவுவரை மாணவர் கல்விக்காய் குரல் கொடுத்தீர். என்றும் மறவார் மாணவர் தம் வாழ்வில் உம்மை.

மனத்துக்கண் மாசிலனாகிய மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து உள்ளத்தில் எண்ணுவதை எல்லாம் உயர்வாய் எண்ணித் துணிந்து கருமமாற்றித் தன்னைச் சார்ந்த அனைவருக்கும் விசுவாசமாக வாழ்ந்த எம் உடன்பிறவாச் சகோதரியின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஊற்றங்கரையானை இறைஞ்சி வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

லோஜினி - மோகனதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:-01**

7 ½ சனி அட்டமத்துசனி காலங்களில் சனீஸ்வரரை வழிபடலாமா?

**பதில்:-**

பொதுவாக ஜோதிடத்தில் சனிக்கிரகம் கர்மகாரகன் என சொல்லப்படுகிறது. கர்மகாரன் என்னும் ஆத்மாவினுடைய முன் ஜென்ம,கல், தீவினைகளை பொறுத்து தாம் செய்கின்ற கருமங்களுக்கான பலன்களை தருபவராக நீதிமானாக நடுநிலை தவறாத இறைவன் எம்மை ஆட்டுவிக்கும் கிரகமாக இருக்கிறது.

இதன்காரணமாகவே - சனிபகவானை வழிபடுவது சிறப்பற்றதாக ஜோதிட ஆரம்ப கர்த்தாக்களின் பழமையான மூல நூல்கள் எதிலும் சிறப்பாக சொல்லப்படவில்லை என்பதுடன் ஜாதக ரீதியில் சனி எனும் கிரகம் ஆதித்திய பலன்களையும் காரக ரீதியான பலன்களையும் வழங்குபவராக இருக்கின்றார். ஆதிபத்திய பலன் அடிப்படையில் பார்ப்பதற்கு ஜாதக ரீதியில் அவ்வினை மேற் கொள்ள வேண்டும் என்பதனால் தாம் காரக ரீதியாக சனி என்ன தருவார் என்பதனை பார்ப்போம்.

காரக ரீதியாக :-

மரண், வம்பு, வழக்கு, முடக்கம், இயலாததன்மை நோய்க்கடன் சோம்பல், தாழ்வுமனப்பங்கு, விபத்து, மரணம்(ஆயுள்), பொறமை வஞ்சகம், கபடத்தனம், வழக்கறிஞர், வயோதிபம், வாதிடுபவர் தனிமை விரும்பி, பிறரை நம்பாத சந்தேகத்தனம், சுயநலம், என இன்னும் பல காரக தன்மைகளை தன்னகத்தே கொண்டிருப்பவராக காரகரீதியாக குறிப்பிடப்படுகிறது.

ஆனால் சனிபகவான் நல்லவர் என்பதனால் நீங்கள் போய் அவரை வழிபடும் கால தன்னிடம் இருப்பதை அப்படியே தருவராக இருப்பதால் சனிபகவானை வழிபடுவது காலச்சிறந்ததாக குறிப்பிடப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி:-02

அப்படியானால் $7\frac{1}{2}$ சனி காலங்களில் பரிகார ரீதியாக என்ன செய்யலாம்?

பதில்:- அதற்கு மூலநூல்களில் ஒவ்வொருகிரகத்திற்கும் நிறம், தானியம், மணம், குணம், பட்சி, உலோகம், கற்கள், பூக்கள், என குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை பயன்படுத்தி பரிகாரம் செய்வதுடன் முதலில் ஜாதகர் தனக்கு என்ன காலம் நடைபெறுகிறது என்பதை ஒரு நல்ல சோதிடரைஅணுகி அறிந்து கொள்ள வேண்டும்.

சனிபகவானை திருப்தி செய்ய...........

| | |
|---|---|
| நிறம் | - கறுப்பு, நீலம் |
| தானியம் | - கறுப்புஎள்ளு |
| மணம் | - நாற்றமுள்ளவாடை |
| குணம் | - சனியின் காரகத்துவத்தை இயக்காத சுத்த குணம் |
| பட்சி | - காகம் |
| உலோகம் | - இரும்பு |
| கற்கள் | - இரத்தின நீலம் |
| பூக்கள் | - நீலநிறபூக்கள் |
| திரவம் | - நல்லெண்ணெய் |

போன்ற பொருட்களை பயன்படுத்தி பரிகாரங்களை மேற்கொள்ள முடியும் - மேற்கண்ட வழிகளை பயன்படுத்தி பரிகாரம் செய்யமுன் ஜாதகரீதியில் சனிபகவான் என்ன நிலையில் அதாவது சுபத்துவம், சூடசுமவலு, மற்றும் கோட்டகாரநிலையில் பாவகரீதியாக எந்தக்கிரகத்தின்மேல் எந்த பாவகத்தின் மீது ஏறிக்கிடக்க இருக்கிறது என்பதை நன்கறிந்து அனுபவ ஞானமுள்ள ஒரு ஜோதிடரின் உதவியுடன் பரிகாரம் செய்வதே உகந்த வழிபாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி :-03

அப்படி யெனில்- பொதுவாக $7\frac{1}{2}$ சனி அட்டமசனி காலத்தில் எல்லோரும் செய்யக்கூடிய பரிகாரம் ஏதாவது உள்ளதா?

*பதில்:- ஆம்*

01. பரம் பொருளான ஈஸ்வரனை பற்றிக்கொள்வது

02. சனீஸ்வரரின் குருநாதர் என அறியப்படும் காலபைரவருக்கு சனிக்கிழமை நாளில் சனி வேறாரை நேரத்தில் மிளகு முடிச்சு வெள்ளை துணியில் கட்டி அதனை நல்லெண்ணெயில் ஊறவைத்து இரும்பு சிட்டியில் பைரவருக்கு தீமாக ஏற்றுதல்.

03. சனிக்கிழமை இரவு சனி வேறாரைக்கு முன்னதாக உறக்கத்திற்கு சென்று படுக்கும் போது கைபடபிடி அளவு எள்ளை துணியில் கட்டி தலைமாட்டில் (தலைக்கு அடியில்) வைத்து படுத்து ஞாயிறுகாலை சாசகத்துக்கு 4 பிடி அரிசி சாதம் வடித்து சோற்றில் இட்டு சாகத்துக்கு உறவிடுதல்

04. சனிக்கிழமை நாளில் நல்லெண்யை தேய்த்து முழுகுதல் பெண்களாயின் தலையில் இருந்து கால்வரை பூசியும் ஆண்களாயின் கால்பாதம் முதல் தலைவரை நல்லெண்ணை தேய்த்து வெயிலில் நின்று சிறு வியர்வை சிந்தியபின் கன்ருக சூடு இறங்க முழுக வேண்டும்

05. சனிக்கிழமை நாளில் வரும் சனிவேறாரை நேரத்தில் நோயாளர் முடவர், கைவிடப்பட்டவர், வயோதிபர், வறுமையில் இருப்போர் போன்றவருக்கு இயன்ற தானங்களை செய்தல்.
சனியின் காரத்தை இயக்கும் வரையில் நடக்காதிருத்தல் போன்றவைகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி 04

$7\frac{1}{2}$ சனி அட்டமசனி வருங்காலங்களில் என்னவகையான பாதிப்புக்கள் ஏற்படும்?

*பதில்:-*

ஜாதகரீதியில் இராசியின் சுபத்தன்மை ஜாதகத்தின் லக்ன அதிபதியின் வலிமை. நடப்பு, தசாபுத்திகளின் தன்மை, ஜாதகவலிமை என்பவற்றை கணக்கிட்டு இந்தக் கேள்விற்கான பதிலை கூறமுடியும்.

எனினும் பொதுவாக $7\frac{1}{2}$ சனி என்று ஓரளவு வாழ்வின் அனுபவங்களையும் அட்டமசனி என்று அனுபவிக்க வேண்டிய தண்டனையும் நிச்சயமாக செய்யும் என்று திணணம்.

$7\frac{1}{2}$ சனி நடக்கும்போது
வயதுக்கு தகுந்த வகையில்

01. பணம் என்றால் என்ன என்பதனை அறியத்தரும்வகையில் பலன் ஏற்படும்.
02. குடும்பம் என்றால் என்ன என்பதனை புரியவைக்கும்.
03. சுற்றி இருப்பவர்களுடன் வழக்கு, வம்பு, முரண் ஏற்படும்.
04. உறவினர் நண்பர்கள் யார் என்பதனை புரியவைக்கும்.
05. ஆரோக்கியம் தொடர்பில் தொல்லைகள் ஏற்படும் இது போன்ற இன்னும் பல ஜாதக கதைகளுக்கு கேற்ப கூடுதல் குணவு இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டமசனி நடக்கும்போது

01. புதிய தொழில் ஆரம்பிக்காது இருப்பது நன்மை ஆகும்
02. செய்யும் தொழிலை விரிவு படுத்தலாகாது
தகுதிக்கு மீறிக்கடன் கொடுக்கவோ வாங்கவோ கூடாது.
03. திருமணத்தைதள்ளிப்போடுவது குடும்பபாதிப்பை தவிர்க்கும்
04. விபரித ஆசை ஏற்படும் (ஒன்று பத்தாகி கோடியில் சிந்தனை
05. இருக்கும் வேலையை விடக்கூடாது.
06. வாழ்க்கை துணையின் அல்லது ஜாதகத்தின் உடல்
நிலையை மருத்துவ ஆலோசனை பெறுதல் நன்மைஆகும்.
07. திருமணமாகாத குடும்ப உறுப்பினர் எனின் தாய், தந்தை,
சகோதரர்கள் உடல் நிலை மற்றும் நளின் உடல் நிலையை
சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.
08. குடும்பத்தில் குழப்பம் சச்சரவு திருபதிவின்மை ஏற்படும்.
09. தெரிந்த தொழிலும் கைகொடுக்காமல் போதும்.
10. விபத்து மரணம், உறுப்பு, பாதிப்பு ஏற்படும்
இவ்வாறு அட்டம சனி பொதுவாக கொடுமையான
பலன்களை தந்து கட்டும்.

இந்தநிலையை பற்றி மதிப்பிடும் போது குடும்பத்தில் இன்னும் பலருக்கு $7\frac{1}{2}$ சனியோ அட்டமத்துசனியோ இருப்பின் அந்தக் குடும்பம் தங்களுக்கு யாரோ செய்வினை செய்து விட்டதாக புலம்புவது கண்கட்டு ஆனால் என் அனுபவப்படி தங்கள் ஜாதகங்களை மதிப்பிடு செய்து விட்டு செய்வினையா இல்லையா என்பதனையும் இன்னமும் எவ்வளவு காலத்தில் நிலைமை சீராகும் என்பதனையும் அறிவதே புத்திசாலித்தனமானதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்கள் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதானவரா?**

**தீராத நோய்** எதுவும் உங்களுக்கு இருக்கிறதா?

நீங்கள் **கர்ப்பமாக** இருக்கிறீர்களா?

நீங்கள் 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதானவரா, மற்றும் நீங்கள் **தடுப்பூசிகளை இட்டுக்கொள்ளாதவரா?**

COVID-19 மற்றும் 'ஃப்ளூ' காரணமாக தீவிர நோய்வாய்ப்படுவதற்கான அதியுயர் ஆபத்து உங்களுக்கு இருக்கிறது.

நீங்கள் குணமடைய உதவுவதற்காக உங்களுடைய மருத்துவர் வைரஸ்-எதிர்ப்பு மருந்து ஒன்றை சிபாரிசு செய்யக்கூடும். வைரஸ்-எதிர்ப்பு மருந்துகள் உங்களுக்குத் தகுமா என்பதைப் பற்றி உங்களுடைய மருத்துவருடன் இப்போதே பேசுங்கள்.

NSW Health　　　　Tamil

# COVID-19
# சுய-தனிமைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம்

உங்களுக்கு COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் நீங்கள் உங்களை சுய தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டிய தேவை இல்லை. ஆனாலும், உங்களுக்குத் இருக்கும் தீவிர நோய்அறிகுறிகள் (நாசிக் கசிவு, தொண்டை வலி, இருமல் மற்றும் காய்ச்சல் ஆகியன) மறையும் வரை நீங்கள் வீட்டிலேயே இருக்கவேண்டுமென சிபாரிசு செய்யப்படுகிறது.

[illegible]

- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] COVID-19 [illegible]

[illegible] Service NSW [illegible] NSW Health [illegible]

# நீங்கள் ஏன் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்

கோவிட்-19 நோய்த்தொற்றினால் மக்கள் மிகவும் நோய்வாய்ப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதில் தடுப்பூசிகள் பாதுகாப்பானவை மற்றும் பயனுள்ளவை. இந்த வைரசுக்கு எதிரான அதிகபட்சப் பாதுகாப்பை உறுதிசெய்ய தடுப்பூசிகளைப் பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

# தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வது எப்படி

தடுப்பூசிகள் பின்வரும் இடங்களில் கிடைக்கின்றன:

- பொது மருத்துவர்கள் (GPs)
- பொதுமருத்துவ சுவாச மருத்துவமனை
- மருந்தகங்கள்
- சமூக சுகாதார சேவைகள்.

உங்களுக்கு ஏற்கனவே உடல்நலப் பிரச்சினைகள் இருந்தாலோ, அல்லது உங்களுக்கு எத்தனை மருந்தளவுகள் தேவை என்பது உறுதியாகத் தெரியவில்லை என்றாலோ, நீங்கள் ஒரு பொது மருத்துவரிடம் (GP) பேச வேண்டும்.

தடுப்பூசிகள் இலவசம். தடுப்பூசி போடுவதற்கு உங்களுக்கு மெடிகேர் அட்டை (Medicare card) தேவையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ளலாம்

5 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைவரும் தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வதற்கான தகுதியுடையவர்களாவர். 6 மாதங்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட சில குழந்தைகள் பின்வரும் சூழ்நிலைகளில் தடுப்பூசிக்குத் தகுதியுடையவர்களாவர்:

- நோய் எதிர்ப்பு சக்தி குறைந்திருந்தால் (immunocompromised)
- உடல் ஊனமுற்றிருந்தால்
- பல்வேறு உடல்நலப் பிரச்சினைகள் இருந்தால்.

'ஓமிக்ரான்' (Omicron) திரிபுகளை இலக்காகக் கொண்ட ஒரு புதிய இருதிற (bivalent) தடுப்பூசியானது, 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைவருக்கும் ஒரு நோயெதிர்ப்பு ஊக்க மருந்தளவாகக் (booster dose) கிடைக்கிறது.

உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் எத்தனை மருந்தளவுகள் தேவை மற்றும் எந்தத் தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது என்பதைப் பற்றி பொது மருத்துவரிடம் (GP) பேசவும். மேலதிகத் தகவல்களுக்குத் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும் என்ற பக்கத்துக்குச் செல்லவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் தடுப்பூசிக்குப் பிறகு

ஊசி போட்ட இடத்தில் வலி, சோர்வு, தலைவலி, காய்ச்சல் அல்லது குளிர் காய்ச்சல் மற்றும் மூட்டு வலி போன்ற பக்க விளைவுகள் உங்களுக்கு இருக்கலாம். பக்க விளைவுகள் இயல்பானவை, அவை தடுப்பூசி செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதற்கான ஒரு அறிகுறியாகும். அவை பொதுவாக இலேசானவை, அத்துடன் ஓரிரு நாட்களுக்குப் பிறகு மறைந்துவிடும்.

கடுமையான பக்க விளைவுகள் மிகவும் அரிதானவை. உங்களுக்குக் கவலை இருந்தால் அல்லது ஒரு சில நாட்களுக்குப் பிறகு பக்க விளைவுகள் ஏதேனும் நீங்கவில்லை என்றால், உங்கள் மருத்துவரைத் தொடர்பு கொள்ளவும்.

# கோவிட்-19 தடுப்பூசிகள் பற்றி

அனைத்து தடுப்பூசிகளும் ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுவதற்கு முன், 'ஆஸ்திரேலிய சிகிச்சை பொருட்கள் நிர்வாகத்தால்' நிர்ணயிக்கப்பட்ட கடுமையான பாதுகாப்பு தரநிலையைப் பூர்த்தி செய்ய வேண்டும். அவை தகுதிவாய்ந்த சுகாதார மருத்துவர்களால் போடப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவில், 4 தடுப்பூசிகள் கிடைக்கின்றன மற்றும் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளன:

- 'ஃபைசர்' (Pfizer)
- 'மாடர்னா' (Moderna)
- 'நோவாவேக்ஸ்' (Novavax)
- 'அஸ்ட்ராஜெனெகா' (AstraZeneca)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தங்கள் வயது மற்றும் மருத்துவ நிலைமை போன்றவற்றின் அடிப்படையில் வெவ்வேறு தடுப்பூசிகளைப் பெறலாம். எந்தத் தடுப்பூசி உங்களுக்குச் சரியானது என்பதை அறிந்துகொள்ளப் பொது மருத்துவர் (GP) ஒருவரிடம் பேசவும்.

## டெங்கு காய்ச்சல் என்றால் என்ன

டெங்கு எனப்படுவது ஒருவகை வைரஸ் கிருமியாகும். இது கொசுக்கள் மூலம் மனிதனுக்குப் பரவி டெங்கு காய்ச்சலை உருவாக்குகின்றது. D1, D2, 3D, 4D என நான்கு வகைப்படும். இவ் வைரஸ்கள் அனைத்தும் எடிஸ் என்னும் ஒரு வகைக் கொசுக்களால் மாத்திரம் பரவுகின்றன.

எயிஸ் வைரஸ்கள் முதலில் ஆபிரிக்க கண்டத்தில் உருவானது. ஆனால் இப்போது உலகெங்கிலுமுள்ள அனைத்து வெப்ப மண்டலப் பகுதிகளிலும் காணப்படுகிறது. ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள மக்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

## டெங்குக் காய்ச்சல் அறிகுறிகள்

டெங்கு நோய் அறிகுறிகள் கொசு கடித்து 4 முதல் 6 நாட்களில் பின்புதான் தெரியும். இந்நோய் தொற்றியவர்களுக்குக் கடுமையான காய்ச்சல், தலைவலி, கண்ணுக்கு பின்னால் வலி ஏற்படல், தசைகள் மற்றும் மூட்டுகளில் கடுமையான வலி ஏற்படும். வாந்தி, குமட்டல், உடற் சோர்வு, உடல் அரிப்பு போன்ற பல அறிகுறிகள் தென்படும்.

முதலில் கால்களில் சிவப்புப் புள்ளிகள் தோன்றிப் பின் உடலில் எல்லா இடங்களுக்கும் பரவும். மூக்கு, வாயிலிருந்து ரத்தக்கசிவு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு காய்ச்சலை சரி செய்யும் வழிகள்

கடுமையான காய்ச்சல் வாந்தி ஏற்படுவதனால் உடலில் நீர்ச்சத்துக் குறையும். எனவே நீர்ச்சத்து குறையாமல் தடுக்க சுத்தமான குடிநீர் மற்றும் நீர்ச்சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

குருதிச்சிறுதட்டுக்கள் இக்காய்ச்சலின் மூலம் குறைவதால் தினமும் பப்பாளி இலைச் சாற்றை குடிக்கல் நன்று.

டெங்கு காய்ச்சல் உள்ளவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும் எனவே தொடர்ந்து நிலவேம்புக் கசாயம் குடித்து வந்தால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கலாம்

இவற்றுடன் நல்ல ஓய்வு எடுத்துக் கொள்வது மிக அவசியமாகும்

## டெங்கு பரவாமல் தடுக்கும் வழிகள்

டெங்கு காய்ச்சலைத் தடுக்கக் கூடிய மருந்துகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவே இதற்கான தடுப்பு வழிமுறைகளை நாமே மேற்கொள்ள வேண்டும்.

நோயைப் பரப்பும் ஏடிஸ் வைரஸானது நல்ல நீரில் முட்டையிட்டு பெரிக்கக்கூடியது ஆகவே வீட்டில் நல்ல தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்களை மூடி வைக்க வேண்டும்.

வீட்டைச் சுற்றியுள்ள தேவையற்ற தண்ணீரை அகற்ற வேண்டும்

யன்னல்கள் தூங்குமிடம் போன்றவற்றில் கொசுவலை பயன்படுத்தலாம் தோட்டங்களில் கொசுக்கள் வராமல் இருக்க மருந்து அடிக்க வேண்டும்.

வீட்டிலுள்ள குளிர்சாதனப் பெட்டியின் பின் தங்கியுள்ள நீரை அடிக்கடி அகற்ற வேண்டும். தினமும் நீரைக் காய்ச்சிப் பருக வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு"**

எங்கள் இதயத் தெய்வத்தின் மரணச்
செய்தியறிந்து துயருற்று நின்றவேளை ஓடோடி
வந்து உதவிகள் புரிந்தும் ஆறுதல் கூறியும்
ஈமக்கிரியைகளில் கலந்து
கொண்டவர்களுக்கும், மலர்தூவி மலரஞ்சலி
செலுத்தியோருக்கும், உள்ளூர்
வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்திகள்
மற்றும் பல உதவிகள் செய்தவர்களுக்கும்
எமது இல்லம் வந்து அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும் இன்னும் பல வழிகளில்
கிரியைகளின் போதும், அந்தியேட்டிக்
கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்
மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும்
ஆசிரியர் மாணவர்கட்கும்
இவ்நினைவு மலரினை அழகுற
அச்சிட்ட பொன்னாச்சி பதிப்பகத்தினருக்கும் எமது
துன்பத்தின் மத்தியில் பணிவுடன்
நன்றி நவில்கின்றோம்.




- குடும்பத்தினர் -


தண்ணீரூற்று மேற்கு,
முள்ளியவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




* அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org